www.Padasalai.Net www.TrbTnpsc.Com

## விழிப்புணர்வு வாசகங்கள்

- விழிப்போடு இருப்போம் – விரட்டுவோம் கொரோனாவை
- சுத்தமான கைகளே சுகாதாரத்தின் ஆதாரம்
- முகக்கவசம் உயிர்க்கவசம்
- கூட்டமாய்க் கூட வேண்டாம்
  கொரோனாவைக் கூப்பிட வேண்டாம்
- முகத்தில் கவசம் அணிந்தே செல்லு
  முன்பின் இருப்போர்க்கும் தெளிவாய்ச் சொல்லு
- ஒழிப்போம் நாமே; கொரோனாவைத் தானே
- இடைவெளி விட்டு இருப்போம் நன்றாய்
  உலகில் பாதுகாப்பாய் இருப்போம் ஒன்றாய்
- கைகளில் கிருமி நாசினி பூசி
  கவனமாய் இருந்து உயிர்க்காத்து சுவாசி
- பகிர்ந்து உண்பது தவிர்ப்பது சிறப்பு
  பரவாமல் கொரோனாவை ஒழிப்பது நம் பொறுப்பு
- ஆறடி இடைவெளியில் இருப்போம்
  ஆண்டவனே வந்தாலும் கைகுலுக்க மறுப்போம்
- கிருமி நாசினியைத் தெளித்து
  கொரோனாவை வரவிடாமல் விரட்டு
- நெடுந்தூரப் பயணத்தைத் தவிர்ப்போம்
  நெருங்கவரும் கொரோனாவை ஒழிப்போம்
- அடிக்கடி கைகளைக் கழுவிடுவோம்
  நோய்த்தொற்று அண்டாமல் காத்திடுவோம்
- வதந்திகளை நம்பி நாமும் அஞ்ச வேண்டாம்
  வழிகாட்டு நெறிமுறையை மிஞ்ச வேண்டாம்
- தடுப்பூசி மருந்துகளை எடுத்துக் கொள்வோம்
  தாக்கவரும் கொரோனாவைத் தடுத்து வெல்வோம்
- உறுதியாக விதிமுறைகளைப் பின்பற்று வோமே
  இறுதியாக்கி கொரோனாவை விரட்டுவோமே



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 600 006
மாநில திட்ட இயக்ககம்

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| மாநில திட்ட இயக்குநர்,<br>ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,<br>மாநில திட்ட இயக்ககம்,<br>சென்னை – 600 006. | முதன்மைக் கல்வி அலுவலர்,<br>அனைத்து மாவட்டங்கள். |

ந.க.எண். 614 /C7/SMC/SMDC/SS/2020, நாள் .02.2021

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – பள்ளி மேலாண்மைக் குழு/பள்ளி மேலாண்மை மற்றும் வளர்ச்சிக்குழு (SMC/SMDC) உறுப்பினர்களுக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு சார்ந்த வாசகங்களுக்கான செலவினம் மற்றும் நிதி விடுவித்தல் – சார்பு.

பார்வை: 1. மத்திய கல்வி அமைச்சகம், திட்ட ஏற்பளிப்புக் குழு கடிதம் எண். F.No.28–2/ 2020–IS-9, நாள் 15.07.2020, (Training of SMC/SMDC வ. எண் – 69 b & 70 b)

2. இவ்வியக்கக கடித ந.க. எண். 614/C7/SMC/SMDC/SS/2020, நாள் 21.12.2020

பார்வை 2–ல் காணும் செயல்முறைகளின்படி ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ், 2020–21ம் கல்வியாண்டிற்கான பள்ளி மேலாண்மைக் குழு/பள்ளி மேலாண்மை மற்றும் வளர்ச்சிக்குழு (SMC/SMDC) உறுப்பினர்களுக்கான மேலாண்மைத் திறன் வளர்த்தல் மற்றும் விழிப்புணர்வு சார்ந்த பயிற்சி கோவிட்–19 சூழலில் இணையதள வழியாக ஜனவரி முதல் வாரத்தில் நடத்தப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில் பள்ளிகளில் நடைபெற்ற பள்ளி மேலாண்மைக் குழு/பள்ளி மேலாண்மை மற்றும் வளர்ச்சிக்குழு (Training of SMC/SMDC) பயிற்சியில் பங்கேற்ற உறுப்பினர்களுக்கு மதிப்பூதியமாக ஒரு உறுப்பினருக்கு ரூ.100/– வீதம் (இணைப்பு 1–ல் உள்ளவாறு) பள்ளிகளுக்கு அனுப்புவதற்காக தொகை ரூ7,73,71,200/– (ரூபாய் ஏழு கோடி எழுபத்து மூன்று இலட்சத்து எழுபத்து ஒன்றாயிரத்து இருநூறு மட்டும்) (தொடக்கநிலை (20 உறுப்பினர்கள்): ரூ.6,25,56,000/– & இடைநிலை (24 உறுப்பினர்கள்): ரூ.1,48,15,200/–) மாவட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்படுகிறது.

மேலும், திட்ட ஏற்பளிப்புக்குழு ஒப்புதலின்படி மற்றொரு செயல்பாடாக பள்ளிகளில் தற்போதுள்ள சூழ்நிலைக்கேற்ப இணைப்பு–3ல் காணும் சுகாதாரம் சார்ந்த விழிப்புணர்வு வாசகங்களை குறைந்தது தொடக்கநிலையில் 5 முதல் 8 வாசகங்களும், இடைநிலையில் 3 முதல் 5



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

வாசகங்களும் மாணவர்கள் பார்வையில்படும் வண்ணம் பள்ளி வகுப்பறைகள், உணவு அருந்தும் கூடங்கள், விளையாட்டு திடல்கள், பள்ளி சுற்றுச் சுவர்கள் (உட்புறம் மற்றும் வெளிப்புறம்), காலை வணக்கக் கூடம் ஆகிய இடங்களில் எழுதுவதற்கும் அறிவுறுத்தப்படுகிறது.

இச்செயல்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியினை இணைப்பு 2–ல் உள்ளவாறு மாவட்ட அளவில் பள்ளிகளுக்கு விடுவிப்பதற்கும் அறிவுறுத்தப்படுகிறது.

பள்ளிகளில் விழிப்புணர்வு வாசகங்கள் எழுதப்படுவதை முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்ட அலுவலர்கள் (ADPC/APO/DEO/BEO/EDC/DC/BRTE) வாயிலாக உறுதி செய்தல் வேண்டும்.

மேற்காண் அனைத்துச் செலவினங்களையும் SMC/SMDC தீர்மானம் நிறைவேற்றி முறையாகச் செலவு செய்து (Receipts & Vouchers) உரிய ஆவணங்களைப் பராமரிக்க வேண்டும்.

பயன்பாட்டுச் சான்றிதழ் பள்ளிகளிலிருந்து முதன்மைக் கல்வி அலுவலருக்கு 23.02.2021 தேதிக்குள் அனுப்புதல் வேண்டும். மாநில திட்ட இயக்ககத்திற்கு 26.02.2021 தேதிக்குள் அனுப்புதல் வேண்டும்.

இச்செயல்பாடுகளின் மொத்த செலவினத் தொகையான ரூ. 10,03,88,570/– (ரூபாய் பத்து கோடி மூன்று இலட்சத்து எண்பத்து எட்டாயிரத்து ஐநூற்று எழுபது ரூபாய் மட்டும்) (தொடக்கநிலை: ரூ.8,26,26,920/– & இடைநிலை: ரூ.1,77,61,650/–) பள்ளி மேலாண்மைக் குழு/பள்ளி மேலாண்மை மற்றும் வளர்ச்சிக்குழு (Training of SMC/SMDC வ.எண்–69b&70b) என்ற தலைப்பின்கீழ் உள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேற்கண்ட அறிவுரைகளைப் பின்பற்றி அனைத்து நடைமுறைகளையும் முறையாக பின்பற்றவும் விடுவிக்கப்பட்ட நிதிக்கான செலவினத்தை மேற்கொள்ள அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:

1. பள்ளி மேலாண்மைக் குழு/பள்ளி மேலாண்மை மற்றும் வளர்ச்சிக்குழு (SMC/SMDC) உறுப்பினர்களுக்கானநிதி விடுவிப்பு விவரம். (தொடக்கநிலை & இடைநிலை).
2. விழிப்புணர்வு வாசகங்களுக்கான செலவின விவரம். (தொடக்கநிலை & இடைநிலை).
3. விழிப்புணர்வு வாசகங்கள்.

for மாநில திட்ட இயக்குநர்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com